# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.212/2017 | Village | : | |
| Prosecution witness | : | PW-12 | Taluk | : | |
| Name | : | திரு. மனோகரன் | Occupation | : | |
| Father Name | : | திரு. முருகையன் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 13.10.2025**

Both accused present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி காவல்நிலையத்தில் சிறப்பு உதவிஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.5.2017 அன்று தஞ்சாவூர் தெற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றிய போது கு.எண் 155/2017 வழக்கில் இறந்துபோன திரு. ரமேஷ் என்பவரின் பிரேதத்தை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறை பேராசிரியர் திரு தமிழ்மணி என்பவரிடம் ஒப்படைத்து சடக்கூறாய்வு முடிந்து அங்கு வந்து விசாரணை மேற்கொண்ட ஆய்வாளர் திருமதி. சந்திரா அவர்கள் என் முன்பாகவும், சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியமூர்த்தி என்பவர் முன்பாகவும் இறந்த ரமேஷ் உடலில் இருந்த இரத்த கறை படிந்த வெள்ளை கலர் முண்டா பனியன், இரத்த கறை படிந்த சிமெண்ட் கலர் பேண்ட், பச்சை வெள்ளை கட்டம்போட்ட துண்டு, ரக்சின் கருப்பு பெல்ட் ஒன்று ஆகியவைகளை கைபற்றினார். பின்பு உடலிலிருந்து பரிசோதனைக்காக எடுக்கபட்ட உடல் உறுப்புகள் தக்க ஆவணங்கள் மூலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் என்னால் கொண்டுபோய் ஒப்படைக்கபட்டது. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் கைபற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது, 1வது கையெழுத்து திரு புண்ணியமூர்த்தியுடையது. அந்த மகசர் **அ.த.சா.ஆ.16** ஆகும்.இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.